www.Padasalai.Net www.TrbTnpsc.com

V8SS

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முழு ஆண்டுத் தேர்வு - 2023

வகுப்பு 8

காலஅளவு: 2.30 மணிநேரம் சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 15×1=15

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை ..........
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய அரசு எது?
அ) அயோத்தி ஆ) ஹைதராபாத் இ) உதய்பூர் ஈ) குவாலியர்

3) வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார் ........
அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி

4) இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ........
அ) 1992 ஆ) 2009 இ) 1986 ஈ) 1968

5) இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ..........
அ) தர்மாம்பாள் ஆ) முத்துலட்சுமி அம்மையார்
இ) மூவலூர் ராமாமிர்தம் ஈ) பண்டித ரமாபாய்

6) பருத்தி வளர ஏற்ற மண் ..........
அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) வண்டல் மண் ஈ) மலை மண்

7) போரின் காரணமாக நடைபெறும் இடப்பெயர்வு .......... ஐ சார்ந்தது
அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம்
இ) அரசியல் ஈ) பொருளாதாரம்

8) இந்தியப் பெருங்கடலில் சுனாமி .......... ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008

9) ஆழம் குறைந்த நீர் பகுதிகள் ........... வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.
அ) மஞ்சள் ஆ) பழுப்பு இ) வெளிர்நீலம் ஈ) அடர் நீலம்

10) உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் ............
அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

11) அவசர காலத்தில் அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்கவேண்டிய எண் ......
அ) 108 ஆ) 100 இ) 106 ஈ) 101

12) உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் ..........
அ) சண்டிகர் ஆ) பம்பாய் இ) கல்கத்தா ஈ) புதுடெல்லி

13) இந்திய வெளியுறவுக் கொள்கையானது பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவைகளுள் ஒன்று ............
அ) சத்தியமேவ ஜெயதே ஆ) பஞ்சசீலம்
இ) மேற்கூறிய இரண்டும் ஈ) மேற்கூறிய எவையுமில்லை

14) வங்கி பணம் என்பது எது?
அ) காசோலை ஆ) வரைவு
இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

15) பொதுத்துறை ........... உடையது.
அ) இலாப நோக்கம் ஆ) சேவை நோக்கம்
இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

16) தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் ........
17) செர்னோபில் அணு விபத்து ........... ஆண்டில் நடைபெற்றது.
18) இந்திய கடற்படையின் தலைமை தளபதி .......... ஆவார்.
19) நிகழ்நிலை வங்கியை .......... என்று அழைக்கலாம்
20) .............. என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

**III. பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 21) டாக்கா | - | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| 22) அபாயகர கழிவுகள் | - | 8 உறுப்பினர்கள் |
| 23) ஆளுநர் | - | காலாவதியான மருந்துகள் |
| 24) சார்க் | - | மஸ்லின் துணி |
| 25) GDP | - | பெயரளவுத் தலைவர் |

**IV. சரியா? தவறா?:** 4×1=4

26) காரன் வாலிஸ் பிரபு காவல்துறையை உருவாக்கினார்.
27) 1799 அக்டோபர் 17 ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
28) மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத் தன்மைக் கொள்கையை பின்பற்றினார்.
29) பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினை பார்க்க வேண்டும்.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

V8SS

V. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு:

30) பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன:

I. இருமுகத் தேவை பொருத்தமின்மை
II. செல்வத்தை சேமிக்க சிரமமில்லை
III. பொதுவான மதிப்பின் அளவுகோல்.
IV. பொருட்களின் பகுபடாமை.

அ) I மற்றும் II சரி ஆ) I மற்றும் IV சரி
இ) I, III மற்றும் IV சரி ஈ) மேற்கூறிய அனைத்தும்

31) தவறான இணையை கண்டுபிடிக்கவும்:

அ) தீன் இலாகி - ஒரு புத்தகம்
ஆ) கஜீராஹோ - இந்து கோவில்
இ) அசோகர் - பாறைக்கல்வெட்டு
ஈ) இக்பால் - கவிஞர்

VI. காரணம் கூறுக (ஏதேனும் 3 மட்டும்): 3x2=6

32) உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.
33) புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.
34) எகிப்து நைல் நதியின் நன்கொடை என் அழைக்கப்படுகிறது. ஏன்?
35) அண்டார்டிகா ஆராய்ச்சியார்களின் கண்டம் என அழைக்கப்படுகிறது ஏன்?.
36) நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவப் பாறைகள் காணப்படுகின்றன.

VII. வேறுபடுத்துக (ஏதேனும் 4 மட்டும்) 4x2=8

37) மண் வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு.
38) காலநிலை மற்றும் வானிலை.
39) இடர் மற்றும் பேரிடர்.
40) வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி.
41) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்.
42) பெரிய அளவை மற்றும் சிறிய அளவை புவிப்படங்கள்.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் : (ஏதேனும் 10 மட்டும்) 10x2=20

43) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக?
44) இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
45) தட்சசீலம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?
46) இடைக்கால இந்தியாவில் குறிப்பிடத்தக்க பெண்கள் யாவர்?
47) மண்ணின் வகைகளைக் கூறுக?
48) நகரமயமாக்கம் என்றால் என்ன?
49) தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக?
50) இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?
51) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக?
52) பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்களைக் குறிப்பிடுக?
53) போக்குவரத்து சமிக்கைகளின் விளக்குகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடுக?
54) கருப்பு பணம் என்றால் என்ன?
55) சமுதாய தேவை என்றால் என்ன?

IX. விரிவான விடையளி: (ஏதேனும் 4 மட்டும்) 4x5=20

56) 1857 ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக?
57) சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம் குறித்து விரிவாக விடையளிக்கவும்?
58) வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது?
59) நிலஅதிர்வை வரையறுத்து அதன் விளைவுகளை பட்டியலிடுக?
60) மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக?
61) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
62) சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி?
63) பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

X. 64) இந்திய வரைபடத்தில் குறிக்கவும்: 5x1=5

டெல்லி, பாரக்பூர், விக்கிரமசீலா, வங்காள விரிகுடா, அகமதாபாத்

65) உலக வரைபடத்தில் குறிக்கவும்: 10x1=10

டோக்கியோ, மெக்ஸிகோ நகரம், லண்டன், சீனா, பசிபிக் பெருங்கடல், ரஷ்யா, இந்தோனேசியா, செங்கடல், மத்திய தரைக் கடல், சகாரா பாலைவனம்.